**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 32/2020**

**Deposition of Witness for : PW 7**

**Name** : திரு. ராஜாராம்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19-01-2024.**
**(Accused absent 317 Cr.P.C Petition filed and allowed)**

முதல் விசாரணை -

நான் தற்போது கீழ்படூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நானும், என் தம்பி சக்திவேலும் இரவு 1 மணிஅளவில் சென்று கொண்டிருந்தோம். அப்போது தாசில்தார் அவர்கள் எங்களை மடக்கி எங்கு செல்கிறீர்கள் என்று கேட்டார். நாங்கள் சொந்த ஊருக்கு செல்வதாக கூறினோம். அப்போது ஒரு லாரி வந்தது. தாசில்தார் சென்று லாரியில் இருந்தவர்களிடம் விசாரித்தார் அப்போது அவர்களுக்குள் தகராறு நடந்தது. பின்னர் லாரியில் வந்தவர்கள் லாரியை தாசில்தாரை ஏற்றும்படி வந்தார்கள், ஆனால் தாசில்தார் ஒதுங்கிக் கொண்டார். பின்னர் தாசில்தார் அந்த லாரியை துரத்தி சென்றார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்னை போலீசார் காவல் நிலையத்திற்கு வரச் சொன்னார்கள். சம்பவம் நடைபெற்ற மறுநாள் போலீசார் என்னை வரச்சொன்னார்கள். மறுநாள் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலீசார் ஏற்கனவே எனக்கு பழக்கமானர் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கினார்கள். வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்தேன். என்னுடைய போலீஸ் விசாரணையில் லாரி தாசில்தாரை ஏற்றுவது போல் வந்த விவரத்தை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். லாரி நெம்பரை குறித்து வைக்கவில்லை. என்னுடைய போலீசார் விசாரணையில் லாரி நெம்பரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை.

சம்பத்தின் போது பார்த்த லாரி டிரைவரை அதற்கு பின்னிட்டு நான் பார்க்கவில்லை. லாரி ஓட்டுநரின் விலாசம், அடையாளம் தெரியாது. போலீசாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- ராஜாராம்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 32/2020

## Deposition of Witness for : PW 8

| | |
|---|---|
| **Name** | **:** திரு. திருமலை |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19-01-2024.**

**(Accused absent 317 Cr.P.C Petition filed and allowed)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது கீழ்படூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சுமார் 5 வருடத்திற்கு முன்பு திருவண்ணாமலையில் இருந்து காகா ஆஸ்சிரமம் அருகில் இறங்கி எங்கள் ஊருக்கு செல்ல நானும் என் மைத்துனர் காமராஜூம் செல்ல இருந்த போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும், என் மைத்துனர் காமராஜூம் கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2, போலீசார் என்னை விசாரனை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

போலீஸ்காரர் தான் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார். அவர் ஆய்வாளராக, உதவி ஆய்வாளரா என்று எனக்கு தெரியாது. ஆனால் அவர் போலீஸ்காரர் தான். வரைபடம் மற்றும் மற்றொரு எழுதிய பேப்பரில் நான் கையெபத்து போட்டோம். வரைபடத்தில் கையெழுத்து போட்டேனா என்று தெரியவில்லை. இரண்டும் ஒன்றாக இருந்தது. அதில் என்னென்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள் நான் கையெழுத்து போட்டேன். சம்பவம் நடைபெற்று 2 மாதம் கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பார்வை மகஜரில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

போலீசார் என் முன்பு எந்த பார்வை மகஜரோ, வரைபடமோ தயாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/- திருமலை

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.